செய்தி வெளியீடு எண்.59-2017 நாள்: 29.05.2017

## விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் வட்டம் கீழத்தாழனூர் ஏரியில், வண்டல் மண் எடுக்கும் பணியை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன் இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

******

விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் வட்டம் கீழத்தாழனூர் ஏரியில், வண்டல் மண் எடுக்கும் பணியை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன் இ.ஆ.ப., அவர்கள் இன்று (29.05.2017) துவக்கி வைத்தார்.

விவசாயிகள் பயன்பெறும் பொருட்டு விவசாய நிலங்களை செம்மைப் படுத்த தங்கள் கிராமம் அல்லது அருகாமையில் உள்ள கிராமங்களில் பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகள், நீர்நிலைகள் மற்றும் அணைகளை தூர்வாரி, தூர்வாறும் வண்டல் மண்ணை இலவசமாக விவசாயிகளுக்கு வழங்க தமிழக அரசினால் ஆணையிடப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் உள்ள ஏரி மற்றும் அணைகளில் உள்ள வண்டல் மண்ணை எடுப்பதற்கு பொதுமக்களுக்கு அரசு கட்டுப்பாடுகளை விதித்ததன் பயனாக, விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் வண்டல் மண் எடுக்க விண்ணப்பித்தனர். அவ்விண்ணப்பங்களை கனிவுடன் பரிசீலனை செய்து, வண்டல் மண் எடுப்பதற்கு ஆணை வழங்கப்பட்டு வருகிறது.

நஞ்சை நிலம் ஏக்கர் ஒன்றிற்கு 75 கனமீட்டரும் (25 டிராக்டர் லோடுகள்), புஞ்சை நிலம் ஏக்கர் ஒன்றிற்கு 90 கனமீட்டரும் (30 டிராக்டர் லோடுகள்), வீட்டு பயன்பாட்டிற்கு 30 கனமீட்டரும் (10 டிராக்டர் லோடுகள்), மண்பாண்டம் தொழில் செய்பவர்களுக்கு 20 கனமீட்டலும் (20 டிராக்டர் லோடுகள்) அளவிற்கு வண்டல் மண் மற்றும் சவுடு மண்ணினை எடுத்து பயன்படுத்திக் கொள்ளலாம். விவசாய நிலங்களுக்கு இரண்டு வருடத்திற்கு ஒருமுறை இலவசமாக வண்டல் மண் பெற்றுக்கொள்ளலாம்.

வண்டல் மண் தேவைப்படும் விவசாயிகள் தங்கள் பெயரில் உள்ள நிலங்களை வகைபாடு, பரப்பு, வண்டல் மண் எடுக்க கோரியுள்ள ஏரியின் விவரம், உரிமை குறித்த கிராம நிர்வாக அலுவலரின் சான்று மற்றும் அடங்கல் நகலுடன் மனு செய்து, வருவாய் வட்டாட்சியரிடம் வண்டல் மண் எடுப்பதற்கான ஆணையை பெற்றுக் கொள்ளலாம். மாவட்டத்திலுள்ள பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அணைகள், ஏரிகள் அனைத்திலிருந்தும் விவசாயிகள் வண்டல் மண் எடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு வண்டல் மண் எடுப்பதால் மண்ணின் வளம் அதிகரித்தல், இராசயண உரங்கள் பயன்பாடு குறைதல், நிலங்களின் அங்கச் சத்துக்கள் அதிகரித்தல், நிலத்தின் காற்றோட்டம் அதிகரித்தல், ஏரிகளில் நீர் பிடித்தல் அளவுகள் அதிகரித்தல்

போன்றவைகள் ஏற்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக, ஊரக வளர்ச்சித்துறை கட்டுப்பாட்டில் உள்ள கீழத்தாழனூர் ஏரியில், தூர்வாரி, கொள்ளளவு அதிக்கப்படுத்தி, பராமரிக்கும் பணியை மேற்கொள்ள முன்வந்துள்ள பன்னாரி அம்மன் சர்க்கரை ஆலை நிர்வாகத்திற்கு மாவட்ட நிர்வாகம் சார்பாக, மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் நன்றி தெரிவித்தார். மேலும், இன்று 36 விவசாயிகளுக்கு 1785 யூனிட் வண்டல் மண் எடுப்பதற்கான ஆணையை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், திருக்கோவில் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.செந்தாமரை, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு.செல்வசேகர், திருக்கோவிலூர் வருவாய் வட்டாட்சியர் திருமதி.நளினி, திருக்கோவிலூர் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.கண்ணன், பன்னாரி அம்மன் சர்க்கரை ஆலை பொதுமேலாளர் திரு.ராதாகிருஷ்ணன் மற்றும் ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள் உடன் உள்ளனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.